இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 10-06-2023

# நமது நன்றியின் அடையாளங்கள்!

“ஊர் உறங்கும் வேளையிலும் உள்ள முறங்காதான்
யார் மயங்கு போதினிலும் தான் மயங்கலில்லான்
சீர் விளங்கும் வீரர் புவிப் போர்விளங்க வந்தான்
வீரன் கருணாநிதி எவ்வூரிலுமெழுந்தான்!” - என்று தமிழினத் தலைவர் கலைஞரைப் பற்றி எழுதினார் கவியரசு கண்ணதாசன்!

அத்தகைய தமிழினத் தலைவர் கலைஞருக்கு சூன்- 3 பிறந்த நாள். அதுவும் இந்த ஆண்டு நூறாவது ஆண்டு. கடந்த 3 ஆம் தேதி கொண்டாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஒடிசாவில் நடந்த ரயில் விபத்து 280க்கும் மேற்பட்டவரை பலிவாங்கியது. நூற்றாண்டு விழாவையே தள்ளி வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘அதனைத்தான் மனிதநேய மாண்பாளரான தலைவர் கலைஞர் அவர்களும் விரும்பி இருப்பார்’ என்று சொன்னார் முதலமைச்சர் அவர்கள்.

பல நேரங்களில் தனது பிறந்தநாளையே கொண்டாடாமல் தவிர்த்தவர்தான் கலைஞர் அவர்கள். ஈழப்பிரச்சினை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் பல முறை தலைவர் கலைஞர் அவர்கள் இப்படிச் செய்துள்ளார்கள். பிறந்த நாளின் போது வசூலான பணத்தை ஈழப்போராளி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்தார், (1986) கலைஞர் அவர்கள். 1988 ஆம் ஆண்டு பிறந்தநாள் செய்தியாக, ‘இந்திய ராணுவத்தால் பிரபாகரனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படுத்தக் கூடாது. போர் நிறுத்தம் செய்து உடனடியாக சுமூக நிலைக்கு வழிகாண வேண்டும் என்றும் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன். இதுதான் எனது பிறந்த நாள் செய்தி’ என்று அறிவித்தார் கலைஞர் அவர்கள். எனவே, கலைஞரின் நூற்றாண்டு விழாவை ஒடிசா மாநிலத்தில் நடந்த கோர விபத்துக்காகத் தள்ளி வைத்ததுகூட கலைஞருக்குப் பெருமை சேர்ப்பதாகவே அமைந்திருந்தது.

**3 ஆம் தேதி நடப்பதாக இருந்த கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா 7 ஆம் தேதி வடசென்னை பகுதியில் பின்னி மில் வளாகத்தில் மாநாடு போல நடத்தப்பட்டுள்ளது. சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான சேகர்பாபுவால் நடத்தப்பட்டது நூற்றாண்டு விழா, அல்ல தொடக்க விழா மாநாடு. “75 ஆண்டுகளுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு விதை போட்ட பகுதியில் கொள்கை வேர் பரப்பி ஆல் போல் தழைத்து இருக்கும் இந்த இயக்கத்தை வளர்த்துக் காட்டிய தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை சிறப்போடு, நான் எதிர்பார்த்ததை விட மிகப் பிரமாண்டமானதாக நடத்திக் காட்டி இருக்கிறார் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ‘செயல்பாபு’ என்று என்னால் எப்போதும் அழைக்கப்படும் மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்கள்.” என்று தலைவர் அவர்கள் மேடையிலேயே பாராட்டினார்கள். கலைஞரின் விஞ்சுபுகழ் அனைத்தையும் நெஞ்சுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து மனக்கண் முன்னால் நிறுத்தியது இந்த தொடக்கவிழா மாநாடு.**

தொண்டர்கள் படை சூழ, தோழமைக் கட்சித் தலைவர்கள் அணி சேர்க்க நடந்த விழா, அடுத்து வருகின்ற 12 மாதமும் எத்தகையதாக விழாக்கள் அமைய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

“ஓராண்டு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை - அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாட இருக்கிறோம். இந்தக் கொண்டாட்டங்களின் மூலமாக தலைவர் கலைஞருக்கு இதுவரை கிடைக்காத புதிய புகழைச் சேர்க்கப் போகிறோம் என்பதல்ல; நாம் – நம் நன்றியின் அடையாளமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்! “ என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ‘நன்றி என்பது செயல் செய்தவர்கள் எதிர்பார்க்க வேண்டியது அல்ல, பலன் பெற்றவர்கள் காட்ட வேண்டியது’ என்பார் தந்தை பெரியார். அந்த வகையில் தலைவர் கலைஞர் அவர்களால் பலன் பெற்ற தமிழ்நாடு காட்ட வேண்டிய நன்றி அறிவிப்பு விழாக்களாகவே கலைஞரின் நூற்றாண்டு விழாக்கள் அமையப் போகின்றன. தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும், ஐந்து முறை முதலமைச்சராக இருந்தபோதும் தலைவர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளைத்தான் அதிகமாக பட்டியலிட்டார்கள்.

சாதனைகளைச் செய்வதிலும் சாதனை படைத்தவர் கலைஞர். அவர் செய்த சாதனைகள், சொல்லி முடியாதவை. ஒரு துறை அல்ல, அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்தார். ஒரு காலக்கட்டத்தில் மட்டுமல்ல, வாழ்ந்த காலம் முழுவதும் சாதனைகள் செய்தார். அகில இந்த அரசியலில் - மிக நீண்ட காலம் வாழ்ந்த தலைவர்கள் அனைவரும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். பதவிகளுக்கு வரும் போது மட்டுமே பரபரப்பாகக் காணப்படுவார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் தான் வாழ்ந்த காலம் முழுவதுமே ‘முதலமைச்சரைப்’ போலவே வாழ்ந்தார். ஒன்று அவர் செயலைச் செய்வார். அல்லது செய்ய வைப்பார். இந்த இரண்டு செயல்பாடுகளும் இருந்ததால் எப்போதும் அவர் தலைப்புச் செய்தியாகவே இருந்தார். அவர் செய்த செயல்களை, திட்டங்களை நினைவூட்டினாலே போதும். அதனைத்தான் வலியுறுத்தி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**மாநிலத்தை வளர்த்தெடுத்த தலைவருக்கு நானிலம் போற்றும் நன்றிநவிலும் விழாக்களாக அமையட்டும். அவர் வழித்தடத்தில் திராவிட மாடல் ஆட்சி சிறக்கட்டும்!**

●●

## முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழா!

# தலைவருக்கு தூய தொண்டன் எடுக்கும் விழா!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!

சென்னை, ஜூன் 10 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை மிக சிறப்பாக நடத்திய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச்செல்வன் அவர்கள், “தலைவருக்கு தூய தொண்டன் எடுக்கும் விழா” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டு கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அ.அன்புச்செல்வன் அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு:-

**“அன்புச் சகோதரர்**

**தலைவர் ஸ்டாலின் அவர்களே,**

அன்பான வணக்கம்,

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு உங்களின் உரையை கேட்டது மனதுக்கு நிறைவாக இருந்தது. திராவிட விளக்கை அணையாமல் ஊக்கத்துடன் பாதுகாத்து வருபவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய தாங்கள் என்பதை கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழாவை நடத்திய விதத்தில் நிரூபணம் ஆகிவிட்டது.

முத்தமிழறிஞர் கலைஞரின் புகழுக்கு வானமே எல்லை, அவரது பன்முக ஆற்றலை கழகத் தோழர்கள் மகிழ்ந்து எண்ணத்தக்க வகையில் விழா நடந்த வளாகம் முழுவதும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

தலைவர் கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழா மிகப் பிரமாண்டமாக அமைந்தது அவரது பெருமைகளுக்கு கட்டியம் கூறும் வகையில் இருந்தது.

இத்தகைய நிகழ்வுகளை நடத்துவதில் திறனும் ஆற்றலும் ஒருங்கே பெற்றுள்ள மாவட்டச் செயலாளரும், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சருமான செயல்வீரர் சேகர்பாபு உங்கள் எண்ணங்களுக்கு எழில் வடிவம் கூட்டி நூற்றாண்டு தொடக்க விழாவை அனைவரும் போற்றும் வகையில் மாநாடு போல நடத்தியது தனிச் சிறப்பு.

எதிர் வரும் வருடம் முழுவதும் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அந் நிலபரப்பு முழுவதும் கலைஞரின் பன்முக ஆற்றலை அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளத்தக்க வகையில் நூற்றாண்டு விழாக்கள் அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆற்றலைக் கண்டு வியந்தவர் எனது தந்தையார் இனமான பேராசிரியர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் ஆற்றலைக் கண்டு வியந்த அவரது பேச்சின் ஒரு பகுதியை கீழே பதிவிடுகிறேன்.



“அறிஞர் அண்ணா அவர்களை விட 15 வயது இளைஞனாக இருந்த கலைஞர் அவர்கள் தான் அறிஞர் அண்ணாவிற்கு பெருமளவிற்கு வாரிசாக அவருடைய லட்சியங்களை நிறைவேற்றுகின்ற ஆற்றல் படைத்த ஒரு தலைவராக, அறிஞர் அண்ணா தமிழ்நாட்டு மக்கள் முன்னேற என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று விரும்பினாரோ அவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற வகையில் திட்டமிடக் கூடிய வல்லுனராக,எதிரிகளை எல்லாம் எப்படி சந்திப்பது என்று தெரிந்த வித்தகராக, மாற்றுக் கட்சியினரை மடக்குகின்ற வாதத்தில் வல்லவராக, பத்திரிகை நிருபர்களையே மயக்குகிற உரையாடல் திறன் மிக்கவராக, இன்னும் சொல்லப்போனால் அகில இந்திய அரசியல்வாதிகளில் தென்னகத்தின் தகுதிமிக்க தலைவராக கலைஞர் விளங்குகிறார்.

தமிழனுக்காக உழைத்த தந்தை பெரியார் இல்லை, பேரறிஞர் அண்ணா இல்லை, அவர்களின் லட்சியம் காத்திட கலைஞரைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உணர்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் கலைஞரை மகிழ்ந்து பாராட்டி கலைஞர் எழுதிய சிலப்பதிகாரத்துக்கு பூம்புகார் திரைக் காவியத்திற்கு அருமையான முன்னுரை வழங்கினார். கலைஞருடைய எழுத்தாற்றலை அண்ணா வியந்திருக்கி றார். தம்பி கருணாநிதியினுடைய பணி இன்னும் பல மடங்கு தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார் அறிஞர் அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா பார்த்து பாராட்டியது, செயலாற்றக் கூடியவர் என்ற காரணத்தால். ஓர் அரசியல் தலைவராக இருந்து சமுதாயத்துக்குத் தொண்டு செய்ய வேண்டுமாதலின் அப்படிப்பட்ட இலட்சியத்தை எண்ணிப் பார்த்து செயல்படக் கூடியவர் என்ற காரணத்தால்தான், அதற்கான தகுதி படைத்தவர் கருணாநிதி என்று அன்றே சிறப்பித்தார்.”

கலைஞர் அவர்கள் தான் வாழ்ந்த கோபாலபுரம் இல்லத்தையே மருத்துவமனை நடத்துவதற்கு தானமாக வழங்கி தனது உயிலில் குறிப்பிட்டுள்ளார், அவரது நினைவாக ஓர் மாபெரும் மருத்துவமனையை, பெரும் பொருட்செலவில் கிண்டியில் குறுகிய காலத்தில் அமைத்து அதற்கு கலைஞரின் பெயர் சூட்டியது பொருத்தமான ஒன்று.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் நினைவாக கோட்டூர்புரத்தில் நிறவிய அண்ணா நூற்றாண்டு நூலகம் நிறுவியதற்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில், தென்தமிழகம் பயன்பெறும் வகையில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட மான நூலகத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயர் சூட்டப்படும் என்ற அறிவிப்பு சாலச் சிறப்பான ஒன்று.

சென்னை கடற்கரையில் முத்தமிழறிஞர் நினைவாக அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கிட்டியுள்ள பேனா நினைவு சின்னம் நூற்றாண்டு நிறைவு விழாவில் பொதுமக்கள் பார்வையிட வசதியாக திறக்க வேண்டும் என்ற எனது அவாவை தெரிவித்துக் கொள்கிறேன்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற பொதுதேர்தலில் எதிர்கட்சியினரை ஒன்று திரட்ட சமூக நீதி என்ற கோட்பாட்டின் கீழ் எதிர்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் தாங்கள் வெற்றி பெறுவது ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையை அனைவர் மனதிலும் நிலை நிறுத்தியது சிறப்பு.

இந்திய தேசத்திற்கு வழிகாட்டியாக தாங்கள் இயங்கி வருவது ஒவ்வொரு கழகத் தொண்டனும் பெருமை பெறும் தருனமாகும். தங்களின் சித்தாந்தம் வெற்றி பெற அனைவரும் பாடு பட உறுதியேற்போம்

திராவிட மாடல் ஆட்சியின் குறிக்கோள்கள் வெற்றி அடைய அயராது பாடுபடும் தங்களின் தன்னலமற்ற எண்ணங்களும் செயல்பாடுகளும் வெற்றி பெறுவது உறுதி. தங்களின் கரத்தை பலப்படுத்த கழகத்தவர் அனைவரும் உறுதியேற்க வேண்டிய தருணமிது.

இனிவரும் தேர்தல்கள் அனைத்திலும் கழகத்தின் வெற்றியை உறுதிசெய்வது தான் நாம் முத்தமிழறிஞர் கலைஞரின் தியாக வாழ்விற்கும், அவரது அயராது உழைப்பிற்கு காட்டும் மரியாதையாகும்.

வாழ்க திமுக, வளர்க முத்தமிழறிஞரின் புகழ், ஓங்குக தலைவரின் தொண்டுள்ளம்.

இவண்,

**அ.அன்புச்செல்வன்**

08- 06- 2023”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம் எழுதியுள்ளார்.

## மராட்டிய கடலோர பகுதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு!

*மும்பை, ஜூன் 10 -*

*பிப்பர்ஜாய் புயலால் வருகிற 5 நாட்களுக்கு மராட்டிய கடலோர பகுதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.*

*தென்மேற்கு பருவ மழை தொடங்குவதில் தாமதம் நிலவி வருகிறது. இந்த நிலையில் அதற்கான சாத்தியகூறுகள் தற்போது நெருங்கி வருகிறது.*

*அரபிக்கடலில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் தீவிரமாகி புயலாக வலுப் பெற்றது. இந்த புயலுக்கு பிப்பர்ஜாய் என இந்திய வானிலை ஆய்வு மையம் பெயர் சூட்டி உள்ளது.*

*இந்த புயல் மெதுவாக தரைப்பகுதியை நோக்கி நகர்ந்து வருவதால் வருகிற 5 நாட்களுக்கு மராட்டியம், கோவா, கர்நாடகா மற்றும் கேரளாவின் கடலோர பகுதியில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*மும்பையை பொறுத்த வரையில் வார இறுதியில் பலத்த மழையை சந்திக்க வாய்ப்பு உள்ளது. இதைத்தவிர கொங்கன் பகுதியில் கனமழை முதல் மிககனமழை வரையில் பெய்யக் கூடும். தற்போது புயல் கிழக்கு மத்திய அரபிக்கடலில் வடக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் தீவிர புயலாக வலுவடையும்.*

*இதன் காரணமாக அரபிக்கடலில் அடுத்த 5 நாட்களுக்கு காற்றின் வேகம் மணிக்கு 80 கி.மீ. முதல் 155 கி.மீ. வரை இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.*

*புயல் கரையை கடந்த பிறகு தென்மேற்கு பருவ மழை வருகிற 12ந்தேதி பிறகு தான் தொடங்க இருப்பதாக தெரிவித்து உள்ளனர்.*




நாள்:
11.6.2023 ஞாயிறு
காலை 10 மணிக்கு

இடம்:
திருவாடுதுறை இராசரத்தினம் கலையரங்கம்,
முத்தமிழ்ப் பேரவை, அடையாறு, சென்னை

தமிழ்மொழி, இனம், நாட்டு விடுதலைப் பாவலர், தமிழ்த்தேசியத் தந்தை **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் 28ஆம் ஆண்டு **நினைவேந்தல், படத்திறப்பு** இல்லந்தோறும் பாவலரேறு என்னும் விழைநோக்குடன் **’9 விரற்கடை உயர திருவுருவச் சிலை வெளியீடு’** ஆகிய நிகழ்வுகள் ‘இறையகம்’ சார்பில் நடைபெற உள்ளது.

வரவேற்புரை
வழக்கறிஞர் **இ.அங்கயற்கண்ணி**

தலைமை
வழக்கறிஞர் **பா.மு.திருமலை தமிழரசன்**
இறையகம்

பாடல்: **கதிர் கலைக்கழகம்**

முன்னிலை
தமிழ்வழிக் கல்விச்சுடர் **இறை.பொற்கொடி**
திருவள்ளுவர் தமிழ் வழிப் பள்ளி

முனைவர் **மா.பூங்குன்றன்**
ஆசிரியர், தென்மொழி இதழ்

முனைவர் **கி.குணத்தொகையன்**
பாவலரேறு பைந்தமிழ்ப் பயிற்றகம்

படத்திறப்பு
மாண்பமை **ஆ.இராசா**
நாடாளுமன்ற உறுப்பினர், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்

சிலை வெளியீடு
மாண்பமை **தொல்.திருமாவளவன்**
நாடாளுமன்ற உறுப்பினர் - தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

நினைவேந்தலுரை
பேராசிரியர் **ப.அருளியார்**
சொல்லாய்வறிஞர்

வழக்கறிஞர் **அ.அருள்மொழி**
பரப்புரைச் செயலாளர், திராவிடர் கழகம்

திரு. **மயிலை த.வேலு**
மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க.
சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர்

திரு. **மல்லை சி.ஏ.சத்யா**
துணைப் பொதுச் செயலாளர், ம.தி.மு.க.

திரு. **ஆ.சிங்கராயர்**
துணைப் பொதுச் செயலாளர்
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தொகுப்புரை
திரு. **அ.அறிவன்**
புதுவை அருங்காட்சியகம்

நன்றியுரை
திரு. **பூ.நிறைமொழி**

இறையகம் - 99621 01000